O/L
Day Class
[காலை 8.00 – பி.ப 1.00]
★ முற்றிலும் பாடசாலை போன்ற வசதிகளுடன்
★ முழுப்பாடத்திட்டத்திலும் விரிவான மீட்டல், வினா – விடை வகுப்பு
மே 5 க்கு முன் பதியவும்.
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட், இருபாலை.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ2/50

A/L - 91
விலங்கியல்
அலகு – 3
குழியவியல்
Sat, Sun - 7.00 a.m.
by திரு. கெங்கா
A/L 90
தாவரவியல்
PHYSIOLOGY
[Sat, Sun - 9.00 a.m.]
By திரு. பாலா
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

கூடர்: 4 சுக்கில ஸ்ரு சித்திரை மீ 21 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 27 (04 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-126

7 மெய்ப்பாதுகாவலர் சகிதம்

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கொழும்பு போய்ச் சேர்ந்தனர்

ஜே. ஆருடனும் சிங் பேச்சு

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவையும் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. எஸ். கே. சிங் நேற்றுக்காலை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர். (ஒ-எ)

கிளிநொச்சி பிரசைகள் குழு பொருளாளர் கொலை!

கிளிநொச்சி, மே 04

கிளிநொச்சி பிரசைகள் குழுவின் பொருளாளர் திரு. ஆ. பஞ்சலிங்கம் நேற்று முன் தினம் [செவ்வாய்க்கிழமை] இரவு கொலையுண்டார்.

கிளிநொச்சி திருநகரிலுள்ள திரு. பஞ்சலிங்கத்தின் வீட்டிற்குச் சென்ற இனந் தெரியாத இளைஞர்கள் அவரைக் கத்தியால் குத்திவிட்டு அதன் பின்னர் சுட்டுக் கொன்றதாக அறியப்படுகிறது.

சந்தைப்படுத்தல் திணைக்களத்தில் பணி புரிந்துவந்த இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

இவர் கிளிநொச்சி அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தின் முக்கியஸ்தரும் ஆவார். [ஒ-76]

இவ்வாரம் முழுவதும் விரிவுரைகள் பகிஷ்கரிப்பு

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாரம் முழுவதும் விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பர்.

பல்கலைக்கழக மாணவர் சங்கம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அண்மைக்காலமாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்படுதல், சித்திரவதை செய்யப்படுதல், எழுந்தமானமாகக் கொலைசெய்யப் படுதல் போன்ற செயல்களைக் கண்டிக்கும் வகையிலேயே மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதாக மாணவர் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஒ)

யாழ். பல்கலைக்கழக

மாணவர் தூதுக் குழுவினர் அமைச்சர் ஹமீதைச் சந்திப்பர்

நேற்று உண்ணாவிரதம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மே 4

யாழ். பல்கலைக்கழக மாணவர் தூதுக் குழுவினர் விரைவில் உயர்கல்வி, தொழில் நுட்பக் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்தைச் சந்தித்துப் பேச உள்ளனர்.

★ யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் கண்டபடி கைது செய்யப்படுவது-

★ சித்திரவதை செய்யப் படுவது-

★ எழுந்தமானமாகக் கொலைசெய்யப்படுவது-

மேற்கண்ட விடயங்கள் குறித்து தூதுக் குழுவினர் அமைச்சரிடம் எடுத்துச் சொல்லி தங்கள் கல்வியைத் தடையின்றிப்பெறஉதவுமாறு கேட்பர்.

இதேவேளைமேற்கூறப்பட்ட விடயங்களைமையமாகவைத்து நேற்று யாழ் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். [ஒ]

மாஜி அமைச்சர் காளிமுத்து ஜெயலலிதா அணிக்குத் தாவினர்

சென்னை, மே 4

முன்னாள் அமைச்சர் திரு. கே. காளிமுத்து செல்வி ஜெயலலிதாவைப் பெரும் செயலாளராகக் கொண்ட அ. தி. மு. க வில் நேற்று சேர்ந்தார்.

திரு. காளிமுத்து எம். ஜி. ஆர். தலைமையிலான அ. தி. மு. க அமைச்சரவையில் ஓர் உறுப்பினராக இருந்தார்.

எம். ஜி. ஆர் இறந்த பின்னர் அ தி மு க இரண்டாகப் பிளவுபட்டது. அப்போது இவர் ஜானகி அணியில் இணைந்து கொண்டார். அத்துடன் ஜெயலலிதாவை மேடைகளில் காரசாரமாகத் தாக்கிப் பேசியும்வந்தார்.

ஜானகி அணி சட்ட சபைத் தேர்தலில் படுதோல்வி அடைந்ததைத் தொடர்ந்து தி மு க வில் சேர திரு. காளிமுத்து முயற்சித்து வந்தார்.

இப்போது திடீரென்று நேற்று செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து அ தி மு க வில் இணைந்துகொள்ளும் அறிவிப்பை வெளியிட்டார்.

முன்னர் வேலையிழந்த

3 ஆயிரத்து 500 பேருக்கு இரு வாரங்களில் வேலைவாய்ப்பு

கொழும்பு, மே 4

1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் பங்குபற்றியதனால் வேலையிழந்து இன்னும் வேலைபெறுமல் உள்ள 3 ஆயிரத்து 500 பேரின் பிரச்சினைக்கு இரண்டு வாரங்களில் தீர்வு காணப் போவதாக ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்திருக்கிறார்.

திரும்ப வேலைபெறுதவர்கள் பற்றிய விவரங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஜனாதிபதி கோரியிருக்கிறார்.

இலங்கை மக்கள் கட்சித்தலைவர் ஒலி அபயகுணசேகரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

உத்தியோகபூர்வப் பேச்சுக்கள் இன்று வியாழன் ஆரம்பமாகலாம்

கொழும்பு, மே. 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பிரதிநிதிகளான திரு. திலிப் யோகி, திரு. மூர்த்தி ஆகியோரும் அவர்களது மெய்ப்பாது காவலர்கள் ஏழு பேரும் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் பாதுகாப்பாகக் கொழும்பு வந்து சேர்ந்திருப்பதை அடுத்து இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான உத்தியோகபூர்வப் பேச்சுவார்த்தைகள் இன்று ஆரம்பமாகும் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

ஒருவார கால முயற்சியின் பின்னர் — இந்திய பாதுகாப்புப்படையினரின் தீவிர நடவடிக்கைகளுக்கிடையே சிக்காமல் — விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் வன்னிக காட்டுப்பகுதியிலிருந்து பாதுகாப்பாக கொழும்புக்கு வந்து சேர்ந்த தாக அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவை அண்டிய காட்டுப்பகுதியில் இலங்கை விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்று தரையிறங்கியதாகவும்—

அந்த ஹெலி-கொப்டர் மூலம் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு வந்து சேர்ந்தது மும் அங்கு ஏற்கனவே தங்கி நிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. அன்ரன் பாலசிங்கத்துடன் புலிகளின் உத்தியோகபூர்வ பேச்சாளர்களான திரு. திலிப் யோகி திரு. மூர்த்தி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கொழும்புக்குத் தப்பிச் செல்லாமல் தடுப்பதற்காக வன்னிக் காட்டுப் பகுதியில் இந்தியப் படையினர் கடந்த ஒரு வார காலமாக தீவிர கண்காணிப்பு நடவடிக்கை களை மேற்கொண்டிருந்ததாகவும்—

எனினும் அதனையும் மீறி

[6 ஆம் பக்கம் பார்க்க]

பருத்தித்துறையில் மோதலின் பின் கடைகள் எரிப்பு; பொதுமக்கள் 3 பேர் பலி

பருத்தித்துறை, மே 4

பருத்தித்துறை பிரதான வீதி ஓராங் கட்டையடியில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பெரும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

புலோலியில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருந்த இந்திய அமைதிப் படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தாக்குதல் நடத்தினர். அதனைத் தொடர்ந்தே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலில் மூன்று ஜவான்கள் இறந்தனர் என்றும் மற்றும் நான்குபேர் காயமடைந்தனர் என்றும் அறிய வருகிறது. ஆனால் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. எனினும் இச்சம்பவத்தின்போது காயமடைந்தவர்களை பலாலியில் இருந்து வந்த ஹெலிக் கொப்டர் அவசர சிகிச்சைக்காக ஏற்றிச் சென்றதைக் காண முடிந்தது.

மோதல்சம்பவத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் மரணமான தாக அறிய வருகிறது.

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த குட்டி (வயது 24 எனும் கடற்புலி என்பவரே மரணமானவர் ஆவார்.

மோதல் சம்பவத்தின் பின்னர் ஓராங்கட்டைச் சந்தியில் அமைந்துள்ள பல கடைகள் எரிக்கப்பட்டன. பொதுமக்கள் பலர் தாக்கப்பட்டனர்.

செவ்வாய் அசம்பாவிதங்களின் போது எஸ். குமாரசாமி முதலி (வயது 45), பி. கே. வில்லதாஸ் (வயது 50) ஆகிய இருவரும் அடையாளம் காணப்படாதஒருவரும் மரணமானதாக அறியவருகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

பேச வரும் தலைவர்களுக்கு முழுபாதுகாப்புஉத்தரவாதம்

ஜனதிபதி பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, மே 4

இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தமுன் வரும் எந்தத் தீவிரவாத இயக்கத்தின் தலைவர்களுக்கும் பூரண பாதுகாப்பு வழங்கப் படும்.

வன்செயல்களைக் கைவிட்டுச் சரணடைபவர்களை ஏற்றுக்கொள்ள அமைக்கப்படும் வரவேற்பு நிலையங்களில் சர்வ கட்சிப் பிரதிநிதிகளும் இடம் பெறுவர்.

இந்தத் தகவல்களை ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாஸ வெளியிட்டார்.

மாத்தறை அம்பாந்தோட்டை மாவட்டங்களின் அபிவிருத்தி சம்பந்தமாக அப் பகுதி எம். பி. களுடன் நடத்திய மாநாட்டில் பேசுகை யில் ஜனதிபதி இவற்றைத் தெரிவித்தார்.

எந்தத் தீவிரவாத இயக்கத்துடன் பேசி ஒரு தீர்வுக்கு வந்தாலும் அதுகுறித்து சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடிக் கருத்து ஒற்றுமை காண நடவடிக்கை எடுக்கப்படும்—

அமைதியைக் கண்டு விட வேண்டும் என்ற உண்மையான எண்ணத்துடனேயே அரசு பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளை அகலத் திறந்து வைத்திருக்கிறது— என்றும் ஜனதிபதி சொன்னார். [அ]

சுபநேரம்

04—05—1989
சித்திரை — 21
வியாழக்கிழமை

சுபநேரம்:
07.26 முதல் 08.56 வரை
ராகுகாலம்:
01.26 முதல் 02.56 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

போதாயன அமாவாசை

இலங்கை தமிழ் மாணவன் பணத்தை மோசடி செய்த பட்டதாரிப் பெண் கைது!

சென்னை, மே 4

பொறியியல் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதாக இலங்கை மாணவர் ஒருவரிடம் 67 ஆயிரம் ரூபா வாங்கி (இந்தியப் பணத்தில்) மோசடி செய்ததாகக் கூறப்படும் பட்டதாரிப் பெண் ஒருத்தியை மத்திய குற்றப்பிரிவு பொலீஸார் கைது செய்தனர்.

சந்தேக நபரின் பெயர் வசந்தா - வயது 40 – எம். ஏ. பி. டி பட்டம் பெற்ற இவர் சென்னை அடையாறில் ஒரு கல்வி நிறுவனத்தில் ஆசிரியையாக வேலை பார்த்து வருகிறார்.

இலங்கை மாணவரின் பெயர் ஜெகதீசன். இவர் சென்னை பெசன்ட் நகரில் வசிக்கிறார்.

விசாரணையின் போது வசந்தா இதுபோல் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் அதிக புள்ளி பெற ஏற்பாடு செய்வதாக பத்துப் பதினைந்து பேரிடம் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபா வரை வாங்கியுள்ளார் என்றும் தெரியவந்தது. (ஒ-எ)

கைதடியில் கிரனேட் வீச்சு; பஸ் பயணிகள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 04

நேற்று கைதடிப் பகுதியில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சம்பவம் பற்றி அறியவருவதாவது:-

நேற்றுக் காலை 6-30 மணி அளவில் கைதடிச் சந்தி அமைதிப் படை முகாம் மீது கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்தை அடுத்து சம்பவம் பற்றி அறியாத நிலையில் அவ்வழியாகக் கொடிகாமத்தில் இருந்து வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் அமைதிப் படையினரால் நிறுத்தப்பட்டது. பஸ்சில் அனைவரும் நடந்து செல்லப் பணிக்கப்பட்டனர். ஏனையோர் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகினர்.

தாக்குதலுக்கு உள்ளான 13 பேரில் 7 பேர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது பெயர் விவரம் வருமாறு:-

ஏ. ஆனந்தராஜா [வயது 29 – பஸ் சாரதி] சாவகச்சேரி, கே. எஸ். இரத்தினசாமி [வயது 46] மீசாலை, கே. ரூபசுதன் [வயது 18] யாழ்ப்பாணம், எஸ். புஷ்பராஜா [வயது 25] கொடிகாமம், கே. தவராஜா [வயது 34]

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி

மனம் ஒரு குரங்கு எண்டது உவர் காவியின்ரை விஷயத்திலை சரிதான் பாருங்கோ!

இராணுவத்தினருக்கு பாண் வழங்கியவர் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 4

இராணுவத்தினருக்குப் பாண் விநியோகித்து வந்ததாகக் கூறப்படும் முஸ்லிம் பேக்கரி முதலாளி ஒருவரை இனந்தெரியாதவர்கள் வீட்டிலிருந்து வெளியே இழுத்து வந்து சுட்டுக் கொன்றனர்.

வெலிகமவில் மதுராகொட என்னும் இடத்தில் இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ஒ-எ)

புனர்வாழ்வு நெறிப்படுத்தல் கூட்டம்

திருகோணமலை, மே 4

வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தல் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை 5ஆம் திகதி திருகோணமலை செவின்ஜலன்ட்ஸ் ஹோட்டலில் நடைபெறும்.

முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தலைமையில் கூட்டம்நடைபெறும். நிதிஅமைச்சர்திரு.பெ.சிறிபாகரன், போக்குவரத்து அமைச்சர் ஜனாப் அபு பூசுப், புனர்வாழ்வு அமைச்சர் திரு. சி எம். கணேசலிங்கம், இளைஞர் விவகார அமைச்சர் திரு ஜோர்ஜ் செனவிரத்ன ஆகியோரும் —

வடக்கு-கிழக்கு அரசாங்க அதிபர்கள், அமைச்சர்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகளின் உயர் அதிகாரிகள் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

வவுனியாவில் ஒருவர் பலி!

வவுனியா, மே 4

வவுனியா ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள சென்றியிலிருந்து கடந்த செவ்வாய் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 15 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். ஆறு பொது மக்கள் காயமடைந்தனர். (ஒ)

இளைஞர் விளையாட்டு வகுப்பு

யாழ்ப்பாணம், மே 4

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் இளைஞர் விளையாட்டு வகுப்புகள் இன்று வியாழக்கிழமை மீண்டும் ஆரம்பமாகின்றன.

மருத்துவ மாணவர் ஒன்றியத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. ஏ. பிரபாகரன் இவ்வாறு அறிவித்துள்ளார். [ஒ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

தேவை

பிரபல கூல்பார் ஒன்றிற்கு கணக்காளராக பெண்பிள்ளை தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். உரிமையாளர்: S. இராமச் சந்திரன், தாவடிச் சந்தி, தாவடி. [10816]

ஆள் தேவை

நெல் குத்தல், மிளகாய், மாவு அரைக்கும் மில்லுக்கு உடனே ஆள் தேவை. நேரில் வரவும். A. சிவபாதம், இருபாலைச்சந்தி, கோப்பாய். (10812)

தேவை

Austin A 35 கார் பின் கண்ணாடி பெரியது வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்: இ. சிவராஜன், பரணி பார்மசி, 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [358]

வீடியோ இளப்பிற்கு பெண் முகாமையாளர் தேவை. 1 மைல் சுற்றுவட்டத்துக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். S. T. L வீடியோ இளப், No. 33 நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி சந்தி. [357]

THANKS

I thank the Holy Spirit for answering my earnest Prayer R. M. R (353)

மணமகன் தேவை

பட்டதாரி (44) யாழ்ப்பாணத்தில் அரசாங்க சேவை எழுது வினைஞராக இந்து வேளாள குல மணமகளுக்கு மணமகன் தேவை. சகுந்தலா சீதனம் கொடுக்கப்படும் சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க: 506, C/o Uthayan, Jaffna. [359]

தவறிவிட்டது

செ. நித்தியானந்தராஜா, த பினான்ஸ் கம்பனி பாதுகாவலராகிய எனது அடையாள அட்டை, பாதுகாவலர் அட்டை, 1200/- பணம் என்பன உடைய தாய்வான் பேர்ஸ் நல்லூர் சந்தை மகாலெட்சுமி கோவிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து த பினான்ஸ் கம்பனியில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் [354]

தவறிவிட்டது

நல்லூர் பின் வீதியில் சிறிய திருமண அல்பம் ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (10810)

TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும். சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும். தமிழ் ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17. மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2433]

கோழிக்குஞ்சு விநியோகம்
UPLANDS FARM

(DEKALB) பிறவுண் சேவல் குஞ்சு 50 க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 3-50 சிறு அட்வான்ஸ் கட்டி பதிவு செய்யலாம். இல 9, கந்தையா லேன், சுன்னாகம், (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (10820)

கோழிக்குஞ்சு விநியோகம்

புரொயிலர் குஞ்சுகள் (Broiler Chicks) கறுப்பு சேவற்குஞ்சுகள் பிறவுண் சேவற்குஞ்சுகள். 4/5/89 வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (351)

(Dekalb) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு வரிச் சேவல் குஞ்சுகள் (Cobb) புரொயிலர்க் குஞ்சுகள் [9-5-89] செவ்வாய்க் கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) [10775]

காணி விற்பனைக்கு

நாவற்குழி புகையிரத நிலையத்திலிருந்து கால் மைல் தூரத்தில் கேற்வே வீதியில் 9½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: N. Thillainadarajan 55, Rail Road. Kachcheri East, Jaffna. (10787)

அச்சகம் விற்பனைக்கு

மிகவும் சிறந்த நிலையிலுள்ள ஒட்லி சிலிண்டர் அச்சியந்திரம் புதிய எழுத்துக்கள், கேஸ்கள் மற்றும் அச்சக சாதனங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். முத்துபவர்களுக்கே முதலிடம். முகாமையாளர் 'மலரகம்' ஏழாலை வடக்கு, ஏழாலை. அல்லது தனலட்சுமி புத்தகசாலை, சுன்னாகம். (330)

வலம்புரிச்சங்கு

இல்லங்களில் லட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூசை ஆராதனைகளுக்கும் வியாபார நிலையங்களில் வளங் கொழிப்பதற்கும் உகந்த வலம்புரிச்சங்கு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்க. தாஸ் 188 புதுச் செட்டித்தெருகொழும்பு—13. (331)

வேண்டுகோள்

எமது ஸ்தாபனத்தில் மின் உபகரணங்களைத் திருத்துவதற்கு தந்தவர்கள் தயவு செய்து உடனடியாக பற்றுச் சீட்டுடன் வந்து எடுக்கும்படி வேண்டுகிறோம். தொடர்பு: S. V. N Electronic [work-shop] 116. P. W. D. Road, Mullaitivu. (355)

மணமகன் தேவை

யாழ். இந்து வேளாள 31 வயது G. C. E படித்த சைவ போசன முடைய மணமகளுக்கு அதே குலத்தைச் சேர்ந்த நற்குணமுள்ள நிரந்தர உத்தியோகமுள்ள 40 வயதுக்கு உட்பட்ட மணமகன் தேவை. சீதனம் யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் வீடு உடனடியாக கொடுக்கப்படும் இல 55, C/o உதயன், யாழ்ப்பாணம். [10811]

மயூரி வெளியீடுகள்

G. C. E (O/L) மூன்மாதிரி வினாத்தாள்கள் மயூரி வெளியீடு - 4. வெளியீடு - 5, ஆண்டு 10, ஆண்டு 8. கணிதம் பல்தேர்வு வினாக்கள் 'கலபுத்தக சாலை' யிலும் விற்பனையாகின்றன சிறந்த கணித நூல்களுக்கு மயூரி வெளியீடுகள் (10802)

போட்டோஸ்ரற்

காலை முதல் மாலை வரை மிகவும் தெளிவாகவும் விரைவாகவும் போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கப்படும். கூடுதல் பிரதிகளுக்கு சலுகை உண்டு நாடுவோர்: மக்மிலன் புத்தக சாலை, ஆஸ்பத்திரிவீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [சி/2292]

இறைதவ சைவசமய திருமண சேவை

எம்மிடம் இருமதத்தையும் சேர்ந்த ஆண்களும், பெண்களும் உண்டு. தங்கள் அன்புப் பிள்ளைகளின் வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் அவர்களின் எதிர்காலத்தை சீரும் சிறப்புடனும் அமைக்க எம்மை நாடுங்கள் அமைப்பாளர்: திரு வின்ரோ மகேந்திரா, தொடர்பு: No. 6, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம், (மக்கள் வங்கிக்கருகாமை) No. 17, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (352)

விற்பனைக்கு

வீடியோ படப்பிடிப்புக்குப் பாவிக்கும் ஒறிஜினல் Furi வீடியோக் கசற்றுக்கள் எம்மிடம் விற்பனையாகின்றன. மற்றும் சகலவிதமான வீடியோ Heads உம் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க. எவர்விஷன் 21A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/2411)

பல்கலைக் கழக பேராசிரியர் - விரிவுரையாளர்கள் சம்பளம் அதிகரிப்பு

கொழும்பு, மே 4

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் மாதாந்தச் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய சம்பள உயர்வு கடந்த ஜனவரி முதல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

புதிய சம்பளத் திட்டத்தின் படி, பல்கலைக் கழகப் பேராசிரியரின் சம்பளம் 10 ஆயிரம் ரூபாவில் இருந்து 14 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி விரிவுரையாளர் ஒருவரின் சம்பளம் 3 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து 4 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

முதலாந்தர சிரேஷ்ட விரிவுரையாளரின் சம்பளம் 6 ஆயிரம் ரூபாவில் இருந்து 9 ஆயிரத்து 600 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இணைப் பேராசிரியருக்கான சம்பளம் 8 ஆயிரம் ரூபாவில் இருந்து 12 ஆயிரத்து 200 ரூபாவாக அங்கீகரிக்கப்படும்.

சம்பள அதிகரிப்புச் சம்பந்தமான சுற்றுநிருபம் விரைவில் அனுப்பி வைக்கப்பட வுள்ளது.

நிலுவைகள் அடுத்த மாதம் மத்தியில் வழங்கப்படும். (இ-எ)

A/L - 89
CHEMISTY
PAPER CLASS
திரு. மகாதேவா
B.Sc. Dip – in – Ed
சனி ஞாயிறு 8.15
ஆரம்பம்:
6. 5. 89
[இட நெருக்கடி காரணமாக புதிய அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.] (C/2428)

PERSONAL CLASSES
FOR
Physics
ஆசிரியர்
R. சத்தியசீலன்
21 மணல்தறை லேன்
கந்தர்மடம் (யாழ்)
A/L 91
ஆரம்பம்:
05-05 89
வெள்ளி பிற்பகல் 2.30
விபரங்கள் நேரில்.

A/L PHYSICS
திரு செழியன் B.Sc
பிரிவு: I
DAY CLASS
8.30 — ELECTRICITY
பிரிவு: II
திங்கள் புதன் வெள்ளி 1.00-SOUND
பிரிவு: II
சனி ஞாயிறு 12.00-HEAT
பிரிவு: IV
சனி ஞாயிறு 1.00
PAPER CLASS
(சி/2412)

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) திரஞ்சீவி, மாதவி நடித்த
வில்லாதி வில்லன்

(2) சுமன், சுமலதா நடித்த
சூப்பர் மேன் சுமன்

(3) சஞ்சீவி, ஸ்ரீவித்யா, நடித்த
பாலைவனக் கனவுகள்

வீடியோ விமல்,
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி [மேல்மாடி.]
யாழ்ப்பாணம்.
(10821)

வேலை வாய்ப்பு லிபியா

1.	தச்சுவேலை தெரிந்தவர்கள்	L. D. 85
2.	மேசன்	,,
3.	வெல்டிங் வேலை	,,
4.	பார்பென்டேர்ஸ்	,,

ஒரு L.D. யின் பெறுமதி ரூபா 112.00

வயது 25 — 45. 2 வருட ஒப்பந்தம், வீவு, இன்சூரன்ஸ் லிபியாவின் சட்டங்களுக்கு அமைய இருப்பிடம், மெடிக்கல், உணவு வசதி (Mess Facility) இலவம்.

தயவு செய்து பாஸ்போட், பாஸ்போட் படம் 4, சான்றிதழ்களுடன் உடனடியாக ஒரு கிழமைக்குள் வரவும்.

இந்திராணி ஏஜென்ஸி,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
Licence No. 616
[413]

வேலை வாய்ப்பு

★ லிபியா ★

		சம்பளம்
1.	Electric Engineer	L. D. 170 – 180
2.	ஏயர் கொண்டிஷன் திருத்துபவர்கள்	85 – 95
3.	மோட்டார் வைண்டர்ஸ்	85 95
4.	ஓவர்கெட் லென்ஸ்மன்	85 – 95
5.	எலெக்றிகல் - யந்திய இணைப்புகள்	85 – 95
6.	மெக்கானிக்ஸ் டீசல் லொறி	85 - 95
7.	மெக்கானிக்ஸ் - புல்டோசர் இறேன் போன்ற வாகனங்கள்	85 - 95

ஒரு L Dயின் பெறுமதி ரூ. 112. 00

வயது 25- 45. 2 வருட ஒப்பந்தம், வீவு, இன்சூரன்ஸ், லிபியாவின் சட்டங்களுக்கு அமைய இருப்பிடம். மெடிக்கல் இலவம். 3 மாத புறபேஷன் (Probation)

தயவுசெய்து பாஸ்போட், பாஸ்போட் படம் 4, சான்றிதழ்களுடன் ஒரு கிழமைக்குள் நேரில் வரவும்.

இந்திராணி ஏஜென்ஸி
18 1/1, முதலிகே மாவத்தை,
கோட்டை, கொழும்பு - 1

கிளை:
இந்திராணி ஏஜென்ஸி
நெல்லியடி, கரவெட்டி.
Licence No. 616
[412]

அறிவித்தல்

பரமநாதர் சுகதாசன் ஆகிய நான் சுகவீனம் காரணமாக புத்தூர் பிரசைகள் குழுவின் உறுப்பினர், தலைவர் ஆகிய பதவிகளில் இருந்து 03-05-1989 [புதன்கிழமை] யிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்பதை அறியத்தருகிறேன்.

ப. சுகதாசன்.

புத்தூர்.
03-05-89. [416]

31 ஆம் நாள் நினைவஞ்சலி



★ ● ★

தோற்றம்:
1959. 02. 11

● ★ ●

மறைவு:
1989. 04. 04

வீரவாகு தங்கேஸ்வரன்

1989.4.4. இல் பாலியாறு வெள்ளாங்குளம் என்னும் இடத்தில் நடந்த பஸ் கொள்ளைச் சம்பவத்தின் போது துப்பாக்கிக்கு இரையாகி அகால மரணமடைந்த எமது அருமை மகனுடைய மரணச் சடங்கில் சமுகமளித்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துக்கத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் பலவேறு உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சும்:-

தாய்:

தனங்கிளப்பு, சாவகச்சேரி.

வீரவாகு கனகம்மா, மற்றும் குடும்பத்தினர்.

(C/2431)

160 ஆம் நாள் நினைவஞ்சலி

ப. அமலரூஜன் (அன்பு)

மலர்வு: 03 - 05 - 1966

உதிர்வு: 23 - 12 - 1988

அன்பு என்று ஆசை நீர
அழைத்தோமே வாயார
இன்று நீ உலகில் – இல்லை
எம் உயிரில் கலந்து விட்டாய் – இனி
வாயாலே அழைக்க மாட்டோம்
வார்த்தை பரிமாற மாட்டோம் - எம்
ஊனுடலும் உயிரோடும்
ஒன்றி விட்டாய் வீரனே – நீ
நடந்து வந்த வீதியெல்லாம்
உன் உருவைத் தேடுகிறோம்
நீ செய்து வந்த தீரமெலாம்
நித்தமிலே வைத்திடுவோம்
வீரனே, நின் மரணம் விடுதலைக்கான
அறுப்பல்ல விதைப்பேதான்
தீரனே, நின் தியாகத்திற்காய்
தாழ்த்துகிறோம் எம் சிரங்கள்

இவரின் பிரிவால் துயருறும்:
தாய், தந்தை, சகோதர,
சகோதரிகள், மைத்துனியர்,
மைத்துனர், உறவினர், நண்பர்கள்.

மயிலிட்டி. (411)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியில் சட்டவிரோதமான மின்பாவனை அதிகரிப்பு

வட்டக்கச்சி மே 4

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால வன்முறைகளின் பின்பு சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது மக்கள் பாதுகாப்பற்ற கம்பிகள் மூலம் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவதால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படும் அபாயம் உருவாகி வருகிறது.

இச் செயல்களில் ஈடுபடுவோர் உடனடியாக அவற்றை நிறுத்திக் கொள்ள வேண்டுமென மாகாணசபை உறுப்பினர் ஜோசப் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாதத்தில் மூரசுமோட்டையில் 13 வயதுச் சிறுவன்ஒருவன்சட்டவிரோத மின்சாரம் காரணமாக மரணமடைந்திருந்தான்.

சட்டவிரோத மின்சார பாவனையால் மின் கடத்திகள் பழுதடைவதுடன் மின்சார உபகரணங்களும் சேதத்துக் குள்ளாகின்றன. (இ-163)

காவல் தீவிரம்

வடமராட்சி, மே 4

வல்லை முச்சந்தியில் மீண்டும் இராணுவக் காவல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. வல்லை தொடக்கம் புத்தூர் வரையும் இராணுவ ரோந்தும் பலப்படுத்தப்பட்டுள்ளது. (க-160)

புனர்வாழ்வு: தகவல் சேகரிப்பு

மானிப்பாய், மே 4

புனர்வாழ்வு ,புனரமைப்புப் பற்றிய தகவல்கள் சேகரிப்பதில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் காரியாலய உத்தியோகத்தர்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

உடுவில் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் சேதமடைந்த வீடுகள், ஸ்தாபனங்கள், கோவில்கள் பற்றிய விவரங்களை கிராமசேவையாளர் திரு. மு. ஆறுமுகத்தின் உதவியுடன் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உதவியாளர் திரு. ஜே. எஸ். அலெக்ஸாண்டர் நேரில் சென்று பார்வையிட்டு விவரங்களைச் சேகரித்துள்ளார். [ச-90]

குண்டுத்தாக்கு

கொழும்பு, மே 4

மாத்தளை ஹங்கும்புர என்னும் இடத்தில் ஞாயிறுஅன்று இரவு இனந்தெரியாத நபர்கள் ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் மீது குண்டு வீசித் தாக்கினர். அப்போது வீட்டின் உரிமையாளர் ஜயதிலக்க காயமடைந்தார். வீடு பலத்த சேதமடைந்தது. (ஒ-எ)

மினி வானில் தீ!

குருநகர், மே 4

சாவகச்சேரி சந்தைக்கு யாழ். நகரில் இருந்து வியாபாரிகளை ஏற்றிச் சென்ற 'எல்ப்' வான் ஒன்று தீப்பற்றிக்கொண்டது.

இச்சம்பவம் செவ்வாய் அதிகாலை நுணுவில் சந்திக்கு அண்மையில் நடைபெற்றது.

வானில் பயணம் செய்தவர்கள் அதிலிருந்து பாய்ந்து வெளியேறித் தப்பிக்கொண்டனர். (ஒ-51)

கோரிக்கை

ஊர்காவற்றுறை, மே 4

புங்குடுதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் கடமையாற்றும் பிரதேச சபைகளின் தொழில்நுட்ப அதிகாரிகள் உடனடியாகத் தங்களை யாழ்ப்பாண நகருக்கு அருகிலுள்ள நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இறுதியில் உதவி ஆணையாளரிடம் மேற்படி அதிகாரிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். (இ-16)

புதிய இரதங்கள்

ஊர்காவற்றுறை, மே 4

புளியங்கூடல் மகாமாரியம்மன் தேவஸ்தானத்திற்கென இரண்டு புதிய இரதங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

சுவாமி உள்வீதி வழியாக வீதிவலம் வருவதற்கு உபயோகப்படுத்தப்படவுள்ள இவ்விரு இரதங்களையும் பிரபல சிற்பாசாரியார், திருநெல்வேலி செல்வராசாவும் அவருடைய குழுவினரும் உருவாக்கி வருகின்றனர். (க-16)

தேடுதல் இல்லை; மக்கள் நிம்மதி

ஒட்டுசுட்டான், மே 4

முத்துஐயன்கட்டு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் கடந்த சில நாட்களாக இந்தியப் படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

இதனால் இப்பகுதிகளிலும் இதை அண்டிய பகுதிகளிலும் மக்கள் அச்சமின்றி நிம்மதியாகத் தங்கள் தொழிலைச் செய்துவருகின்றனர். [ஒ-113]

797.5

கொழும்பு மே 4

கடந்த ஏப்ரல் மாதத்துக் கானவாழ்க்கைச் செலவுப் புள்ளி 797.5 என்று குடிசன புள்ளி விபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ச. ச. நிலையத் தளபாடம் உடைப்பு

மண்டைதீவு, மே 4

அல்லைப்பிட்டி மத்தி. சன சமூக நிலையத் தளபாடங்கள் இனம் தெரியாத கோஷ்டி ஒன்றினால் அடித்து உடைக்கப்பட்டு அயலிலுள்ள கிணறு ஒன்றுக்குள் வீசப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-88)

வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

மண்டைதீவு, மே 4

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் வேலணை, அரசினர் பொது வைத்தியசாலை நோயாளர்களுக்கு உதவு முகமாக முச்சக்கரவண்டி ஒன்றையும் ஸ்ரெச்சர் ஒன்றையும் அன்பளிப்புச் செய்துள்ளது. (க-88)

"டினைஸ்ரி" போல், பரம்பரைச் சிறப்புடையது சிங்கர்!

குறுகிய சில வருடங்களில், உள்ளூர்ச் சந்தையில், சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகள் உன்னத அபிமானத்தைப் பெற்று விட்டன. காரணம்? தரத்தில் சிங்கரின் பரம்பரைச் சிறப்புத் தான்! காலம் காலமாக, சிங்கர் பேணியும் வளர்த்தும் வரும் தரச் சிறப்பு. தொழில் நுட்பத்திலும் உறுப்புகளின் நேர்த்தியிலும் விற்பனைக்குப் – பின் –

சேவை ஓழுங்கிலும் நாடு முழுவதும் பரந்து புகழ் பெற்ற சிங்கரின் தரச் சிறப்பு. இலங்கையில், விற்பனைச் சந்தையில் பெரும் பங்கு நிலையைப் பெற்று விட்ட சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் ஆயிரமாயிரம் சொந்தக்காரர்களுடைய நம்பிக்கையை வெற்றி கொண்டதும் அவற்றின் தரச் சிறப்புத் தான். தராதரச் சிறப்புப் போலவே, சிங்கர் தொலைக்காட்சிப் பெட்டிகளின் விற்பனைச் சந்தைப் பங்கு நிலையும் வேகமாய் வளருகிறது.

கிடைக்கும் ரகங்கள் –
12" மற்றும் 14" கறுப்பு/வெள்ளை; 14" வர்ணம் (ஸ்டூடியோ) மற்றும் (மொனிட்டர்); 16" வர்ணம்; 20" வர்ணம், விலை, குறைந்தது ரூ. 4,390/- முதல்.

சிங்கர் தொலைக்காட்சி

உந்து சக்தி பற்பல உடையது; முந்து சக்தி எதுவுமே கிடையாது.

சிங்கர்* மாசற்ற மேன்மை

ZENITH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் சி. யசிந்திரன்

(04- 05- 1989)

கோப்பாய் தெற்கு பழைய வீதியைச் சேர்ந்த சிவகுமார் சந்திராதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் யசிந்திரன் [யசி] தனது முதலாவது பிறந்த நாளை (4-5-89) தனது இல்லத்தில் மிகவும் குதூகல மாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரிய மாமார் மற்றும் மாமாமார்கள், மாமிமார்கள், லதீப் அண்ணா, சுரேக்கா அக்கா, ரஜீவ் தம்பி, மற்றும் ஜேர்மனியில இருக்கும் கயூ அக்கா, ராஜிமச்சாள் மற்றும் உற்றார் உறவினர்கள் யாபேரும் இவரை எல்லாம் வல்ல கோவையூர் வீரபத்திரப் பெருமானின் திருவருள் பெற்று பலகலைகளும் கற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர். [409]

தேவை

எமது பதிப்பகத்திற்கு பின்வரும் துறைகளில் வேலை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த வேலையாட்கள் தேவை.

1. உதவி நிர்வாகப் பொறுப்பாளர் –
   மாத ஊதியம் ரூபா 1000. 00
   (பட்டதாரிகளுக்கு முன்னுரிமை)
2. பியோன் – மாத ஊதியம் ரூபா 700. 00
   (20 — 30 வயதிற்கு உட்பட்டோராய் இருத்தல் வேண்டும்)

தகுதியானோர் தகுந்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் 03 - 05 - 89 காலை 9 மணிக்கு நேரில் சமுகம் அளிக்கவும்.

— அஸ்ரன் பதிப்பகம்

C/o அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/2370)

BRIGHT TRAINING CENTRE

க. பொ. த உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும் வெளிவருகிறது.

'அறிவொளி'
கல்வி வெளியீடு

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப் படுகின்றது கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

அறிவொளி.
பிறைட் பயிற்சி நிறுவனம்,
த பெ. இல. 162.
கொழும்பு.

(308)

PERSONAL CLASS

/L விஞ்ஞான மாணவர்களுக்கு

- **89 Simole Harm nic Motion**
  Sat,Sun & Fri — 6.15.a.m Thu. — 4 30p.m.
  Commences: 04 - 05 - 89
- **90 Projectile**
  Commences: 08 - 05 - 89
  Mon & Wed — 2.45p.m. — 4.45p.m.
  Mr. கணேசன் B. Sc. (Hons)
  TUTORIAL CLASS PHYSICS
- **Electro Statics**
  Sat.& Sun — 12.45p.m. — 1.45p.m.
  Commences: 06 - 05 - 89
  Mr. மணியம் B. Sc. (Hons)

3rd Cross Street, JAFFNA.

[பி-2425]

பல் சிகிச்சை நிலையம் தொடர்ந்து மூடப்பட்டிருப்பதால்

முல்லை. நோயாளர்கள் பாதிப்பு

விசர்நாய்க்கடிக்கும் மருந்து இல்லை

முல்லைத்தீவு, மே. 4

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்டவைத்தியசாலையாக விளங்கும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பற்சிகிச்சை நிலையம் மூடப் பட்டுள்ளது.

அத்துடன் விசர்நாய்க்கடிக்கான ஊசிமருந்தும் இங்கு கிடையாது.

பற்சிச்சை நிலையம் மூடப் பட்டிருப்பதால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விசர்நாய்க் கடிச்சிகிச்சை பெறவிரும்புவோர் பல பிரமங்களின் மத்தியில் யாழ். ஆஸ்பத்திரி, அல்லது வவுனியா ஆஸ்பத்திரி செல்லவேண்டிய நிலை இருந்து வருகிறது.

(இ- 92)

விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் மே 4

உடுவில் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

(ச)

சுருவில் விளையாட்டுக் கழகம் இரண்டு போட்டிகளிலும் வெற்றி

ஊர்காவற்றுறை மே 4

புதுவருட தினத்தை யொட்டி சுருவில் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இரண்டு உதைபந்தாட்டப் போட்டிகளிலும் சுருவில் அணி அமோக வெற்றியீட்டியது.

முதல்போட்டியில் புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக் கழகத்துடன் மோதிய சுருவில் அணி மூன்றுபூஜ்ஜியம் என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது, சுருவில் அணியின் சார்பில் செல்வன் விஜயன், செல்வன் சதீஸ் குமார் ஆகியோர் கோல்களைப் போட்டனர்.

பின்னர் நடைபெற்ற வேலணை விளையாட்டுக் கழகத்திற்கெதிரான போட்டியில் மூன்றுஒன்று என்றகோல் வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடியது. சுருவில் அணியின் சார்பில் விஜயன் சதீசன் ஆகியோர் கோல்களை போட்டனர்.

பெருந்திரளான உதைபந்தாட்ட ரசிகர்கள் கண்டுகளித்த இப்போட்டிகளுக்கு திரு. தேவதாசன் மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

(க-16)

Jaffna College
Institute of Technology
Vaddukoddai

VACANCY

Applications are invited from suitable qualified Candidates for the following post.

ASSISTANT LECTURER

(DEPT. OF COMPUTER & MATHS)

Qualification: Applicants should have a degree of a recognised University in
(i) Computer Science
or
(ii) Mathematics and a Diploma in Computer applications from a recognised Institute with experience and ability to program in Cobol, D base III +, Lotus 1 - 2 - 3 etc.
Knowledge of IBM system operation with MS/PC DOS & Xenix will be an added qualification.

Salary: Negotiable, depending on qualification and experience.

Apply with full Bio - data to.

DIRECTOR,
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.

On or before: 15. 5. 89.

(C/2426)

90 ஆம் நாள் நினைவுதின அழைப்பு

திருமதி தேவராணி முருகதாஸ் (பேபி)

1989 - 05 - 05

கடந்த 1989 - 02 - 05 அன்று பத்தமேனியில் நடைபெற்ற அசம்பாவிதத்தின்போது இன்னுயிர் ஈந்த திருமதி தேவராணி-முருகதாஸ் (பேபி) அவர்களின் 90ஆம் நாள் நினைவுகள் நாளை (1989-05-05) மயிலணியில் நடைபெறவுள்ளது. இத்தருணம் பேபியின் அகால இழப்பினால் தவிக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், தோழர்களை இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

[தவிர்க்க முடியாத சூழ்நிலையால் தனிப்பட்ட அழைப்புகள் வழங்க முடியாமைக்கு மன்னிக்கவும்]

மயிலணி வடக்கு, சுன்னாகம்.

கணவன்: சி. முருகதாஸ் (ரவி)
பெற்றோர்.

[பஸ்தரிப்பு நிலையம் முன்பாக, யாழ்—காங்கேசன்துறை வழி இல. 769] [10817]

இஸ்லாமிய ஆசிரிய சங்க மாநாடு

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி கண்டியில் நடைபெறவிருக்கின்றது.

சங்கத் தலைவர் ஜனாப் எம். வை. ஏ. பாவா தலைமையில் நடைபெறவிருக்கும் இம் மாநாட்டில் நாட்டின் 24 மாவட்டங்களிலிருந்தும் பேராளர்கள் கலந்துகொள்வர்.

மேலும் மாநாட்டில் உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சீ. எஸ். ஹமீத் பிரதம அதிதியாகவும், வர்த்தக, கப்பற்றுறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர் மன்சூர் கௌரவ அதிதியாகவும் கலந்துகொள்வர்.

மக்கள் முகம்

வதிரி இருதயக் கல்லூரி

கரவெட்டி, மே. 04

வதிரி திருஇருதயக் கல்லூரி அபிவிருத்திச் சபையின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. சி. வின்சன்ற் (அதிபர்), செயலாளர்:- திரு. ப. மகாலிங்கம், பொருளாளர்:- திரு. ஜே. எஸ். ஜேசுநாயகம். (ச-70)

காரைநகர் ம.ம.வித்தியாலய நிர்வாகிகள்

காரைநகர், மே. 04

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபையின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. மு. திருநீலகண்டஐயர் (அதிபர்), செயலாளர்: திரு. க. குலரத்தினம், உபசெயலாளர்: திரு. எஸ். செல்வரட்னம், பொருளாளர்: ஆ. ஜெகநாதன்.

(ச-73)

வேலணைசரஸ்வதி நிர்வாகிகள்

வேலணை, மே. 04

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையின் அபிவிருத்திச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பொ. நடராஜா (அதிபர்)

செயலாளர்: திரு. க. பொன்சந்திரமூர்த்தி.

பொருளாளர்: திரு. சு. திசைநாயகம் (ஆசிரியர்)

(க-167)

அறிவொளி

அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப் படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்
அறிவொளி
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]

அந்தியேட்டி - 'வீட்டுக்கிருத்திய அழைப்பு

சென்ற விபவ ஆண்டு பங்குனி மாதம் 24-ஆம் நாள் (06- 04- 89) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவன்

நாகலிங்கம் நடராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05- 05- 1989 வெள்ளிக்கிழமை கிரிமலையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 06- 05- 89 அன்று அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பாதிரி கோயிலடி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளை.

[339]

மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்:
20- 01- 1950

விண்ணுலகில்:
07- 05- 1986

திதி: 04- 05- 1989

அமரர்

திரு. இளையதம்பி அம்பிகைபாகன்

(முன்னாள் ரஜனி ரான்ஸ்போட் உரிமையாளர்)

எங்கள் இல்லத்தின் ஒளி விளக்காய் இருந்து எங்கள் நல் வாழ்விற்கு வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! எங்களைப் பிரிந்து மூன்றுண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சங்களில் அணையாத தீபமாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

(10752]

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

கந்தையா நாகலிங்கம்

(இளைப்பாறிய அதிபர், நாகேஸ்வரி வித்தியாசாலை சுன்னாகம்)

மண்ணில்:
16 - 10 - 1909

விண்ணில்:
27 - 4 - 1987

அன்புத் தெய்வமே! பாசத்தின் பிறப்பிடமே! அறிவுச் சுடர்விளக்கே! அன்போடும் ஆசரவோடும் எம்மை ஆதரித்த தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றென்றும் அழியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம். (பி/2422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா மொழி

குறள்:

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

பொருள்:

கள்ளுண்பவன் 'யான் ஒருபோதும் கள்ளுண்டறியேன்' என்று சொல்வதை விடவேண்டும்; நெஞ்சில் ஒளித்திருந்த குற்றமும் கள்ளுண்டபோதே வெளிப்படும்.

உதயன்
இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
04 - 05 - 1989 த. பெ. இல: 23

அர்த்தமுள்ள கோரிக்கை

சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை எழுந்துள்ளது.

இலங்கை அஞ்சல், தொலைத் தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் கல்முனைக் கிளை இது சம்பந்தமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது.

இனத்துவேஷ உணர்வோடு, இனவெறி உணர்ச்சியுடன், வேகமாகவும் வீச்சாகவும் 1956 இல் கொண்டு வரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் இந்த நாட்டின் அரசியல் பிரளயங்களுக்கு அத்திவாரம் இட்டது.

நாட்டின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும், முன்னேற்றத்தையும் தூரதிருஷ்டியுடன் நோக்க மறந்து, இனவெறி என்ற குறுகிய நச்சு வட்டத்தில் நின்று உருக்கொண்டு ஆடிய சிங்கள அரசியல் தலைவர்கள், ஆக்கிய அந்தச் சட்டத்தின் மிகப் பாரதூரமான விளைவுகளை இந்தத் தேசத்தை உருக்குலைத்து விட்டதைக் கண்ணுரைக் காண முடிகிறது. சகல மக்களும் துன்ப, துயரங்களை அனுபவித்துச் சலித்து விரக்தி அடைவதைக்காணவும், கேட்கவும் முடிகிறது.

இலங்கையின் இன்றைய சீர்கெட்ட, அமைதி குன்றிய, குழப்பம் நிறைந்த, வளர்ச்சி நலிந்த அல்லோல கல்லோல நிலைக்கு வித்தாக விளங்குவதே சிங்களம் மட்டும் சட்டம் தான். இதனைச் சிங்கள மக்களும் உணரும் நிலையும் காலமும் வந்துவிட்டன.

சிங்களம் மட்டும் சட்டம் நாட்டின் அரசியலில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது போலவே, தமிழ் பேசும் மக்களின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் மிகப் பெரிய பாதிப்புகளை உண்டாக்கியது. அவற்றைக் கூட்டிச் சேர்க்கும்போது, சிங்களச் சட்டம், தமிழ்ச் சமூகத்தின் மீது பெரும் தாக்கங்களைக் கட்டவிழ்த்து விட்டது. கல்வி, வேலைவாய்ப்பு, ஆகிய துறைகளில் ஒரு ஓரத்துக்கே தமிழ்ச் சமூகத்தை ஒதுக்கித் தள்ளியது எனலாம்.

அதிலும் தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்த வரையில், பெரும் நஷ்டங்களை உண்டாக்கியது. சிங்களம் அவர்கள் மீது நேரடியாகத் திணிக்கப்பட்டது. குரல் வளைக்குள் வைத்து இடித்துத் தள்ளப் பட்டது. அதனால் அவர்களின் வாழ்க்கை மூச்சு வலு விழந்து போக வேண்டியதாயிற்று.

சிங்களத்தில் தேர்ச்சி பெருவிடில் சம்பள உயர்வு இல்லை; பதவி உயர்வு இல்லை என்ற அநியாய விதிகள் நடைமுறைக்கு வந்தன. அதனால் பல தமிழ் ஊழியர்கள் சம்பள உயர்வு, பதவி உயர்வு இல்லாமலே கடைசி வரை பணிபுரிந்து சொற்ப ஓய்வூதிய வசதியுடன் இளைப்பாற நேர்ந்தது.

இன்னும் மிகமிகப் பெரும் எண்ணிக்கையானோர் பாதி வயதிலேயே, உரிய சேவைக்கால முதிர்ச்சி இன்றியே இளைப்பாற நேர்ந்தது.

இவற்றால், தமிழ் அரச ஊழியர்களின் வாழ்க்கையில் பல கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏற்பட்டன. அவர்கள் விட்ட தவறுகளால் அந்தக் கஷ்ட நஷ்டங்கள் வந்ததில்லை. அரசாங்கங்கள் கொண்டுவந்த விதிமுறைகளால், சிங்களம் மட்டும் சட்டத்தின் அமுலினால் விளைந்தவை. எனவே அவற்றுக்கு நஷ்ட ஈடு வழங்கக் கோருவதில் எவ்வித தப்புமில்லை. அது அர்த்தமுள்ள கோரிக்கையும் ஆகும்.

இஸ்ரவேலை அழிக்கும் பிரகடனம் இனிச் செல்லுபடியாகாது!

பிரெஞ்சு டெலிவிஷனில் அரபாத் அறிவிப்பு

பாரிஸ், மே 3

பிரெஞ்சு டெலிவிஷனில் நேற்று பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் உரை நிகழ்த்தினார்.

அப்போது அவர் சொன்னதாவது:

இஸ்ரவேலை அழித்துவிட வேண்டும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் முன்னர் வெளியிட்ட பிரகடனம் செல்லுபடியாகாது.

இரண்டு நாடுகள் இயங்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நான் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டேன்.

இப்படி அரபாத் தெரிவித்தார்.

பிரெஞ்சு டெலிவிஷனில் அரபாத் பேசிக்கொண்டிருந்த சமயம் டெலிவிஷன் நிலையத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கான யூதர்கள் அரபாத் எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்பினர்.

இஸ்ரவேலை அழித்தொழிப்பது என்ற சாசனத்தை பலஸ்தீன விடுதலை இயக்கம் ரத்துச்செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மித்தரண்ட் அரபாத்திடம் தெரிவித்தார்.

அரபாத்துடன் ஜனாதிபதி மித்தரண்ட் பேச்சு நடத்தியதை யூதர்கள் கண்டித்தனர். (எ)

மாணவரின் அரசு எதிர்ப்பு மோதலில் ஆறு தென்கொரியப் பொலீஸார் பலி!

சோல், மே 3

தென்கொரியாவில் பல்கலைக் கழக மாணவருடன் நடந்த மோதல் ஒன்றில் ஆறு பொலிஸார் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இதுபற்றிய விவரம் வருமாறு:

தலைநகர் சோலில் இருந்து 100 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள குஸான் நகரில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

பொலீஸாருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் குஸாலில் உள்ள டொங்கிங் பல்கலைக் கழக மாணவர் ஈடுபட்டிருந்தனர்.

கலகம் அடக்கும் பொலீஸாரில் ஐந்து பேரைப் பிடித்துக்கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள், அவர்களை பல்கலைக்கழகத்தின் ஏழாவது மாடியில் பணயக் கைதிகளாக அடைத்து வைத்திருந்தனர்.

பணயமாக வைக்கப்பட்டிருந்த பொலீஸாரை விசேட பொலீஸ் கோஷ்டி ஒன்று பல்கலைக்கழகத்தை முற்றுகையிட்டது.

அப்போது மாணவர்கள் பல்கலைக்கழகக் கட்டடங்களுக்குத் தீயிட்டனர்.

முற்றுகையிட்ட பொலீஸாரும் நெருப்புக்குள் சிக்கிக் கொண்டனர். பல்கலைக்கழக நூல்நிலையத்தின் பெரும்பகுதி நாசமாகியது.

சுற்றி வளைத்த நெருப்பில் இருந்து தப்ப பொலீஸார் மாடிக் கட்டட ஜன்னல் வழியாக பாய்ந்தனர்,

அப்போது சில பொலீஸார் உயிரிழந்தனர். வேறு சிலர் எரிகாயங்களுக்குள்ளாகி மரணமானார்கள்.

அரசுக்கு எதிர்ப்பான நடவடிக்கைகளில் மாணவர் தொடர்ந்து ஈடுபட்டால் அதை அடக்க அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்த தயங்கப்போவதுஇல்லை என்று ஜனாதிபதி ரொ-டே-வூ எச்சரித்துள்ளார். (எ)

மே 31 இல்

இந்திய செயற்கைக்கோளை அமெரிக்கா ஏவுகிறது!

புதுடில்லி, மே 3

டெலிவிஷன் மற்றும் தகவல் தொடர்புக்காக இந்தியா சுமார் 400 கோடி ரூபா செலவில் தயாரித்துள்ள ரொக்கெட் இம் மாதம் 31 ஆம் திகதி அமெரிக்காவில் கேப் கனவரால் விண்வெளி நிலையத்தில் இருந்து ஏவப்படவுள்ளது.

இந்தியா ஏற்கனவே இன்சாட்-1ஏ, இன்சாட்-1பி, இன்சாட்-1சி ஆகிய 3 செய்மற்கைக் கோள்களை வானவெளிக்கு ஏவியது.

இதில் இன்சாட்-1ஏ செயற்கைக்கோள் தோல்வியில் முடிந்தது.

இன்சாட்-1பி மட்டும் இயங்கி வருகிறது. மூன்றுவதாக அனுப்பப்பட்ட இன்சாட்-1சி செயற்கைக்கோளில் பட்டரி கோளாறு காரணமாக அதில் பாதி மட்டும் செயல்பட்டு வருகிறது.

இன்சாட்-1பியின் ஆயுள் இந்த ஆண்டுக் கடைசியுடன் முடிவடைகிறது.

எனவே அதற்கு முன் புதிய செயற்கைக்கோள் ஒன்றை செலுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. (எ)

தமிழகத்தில் மீண்டும் வன்னியர் ஆர்ப்பாட்டம்

சென்னை, மே 3

இடஒதுக்கீட்டுப் பிரச்சினை தொடர்பாக தமிழ் நாட்டில் சில இடங்களில் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

விழுப்புரம் அருகே நேற்று ஆர்ப்பாட்டம் செய்த வன்னியர்கள் மீது பொலீஸார் சுட்டனர்.

அப்போது ஒருவர் உயிரிழந்தார். சுமார் ஆயிரம் பேர் பொலீஸாரைத் தாக்கமுயன்றபோது இத் துப்பாக்கிச் சூடு இடம் பெற்றது.

இதே வேளை—வன்செயலைத் தூண்டும் எந்தப் போராட்டத்துக்கும் அரசு இடமளிக்காது என்று முதலமைச்சர் கருணாநிதி வலியுறுத்தி இருக்கிறார். (ஒ-எ)

தேர்தல் குறித்து பிரதமர் ராஜீவ்

அகமதாபாத், மே 3

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படுவதில் மாற்றம் ஏற்படுவதற்குரிய காய்ப்புக்கள் இல்லை என்று சொல்லி விட முடியாது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

அகமதாபாத் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர் மத்தியில் பிரதமர் இதனை அறிவித்தார். [ஒ எ]

லோக்தள் கட்சி மூன்றுகப் பிளவு

புதுடில்லி, மே. 2

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான லோக்தள் மூன்றுகப் பிரிந்தது. [எ]

லாரீயூனியன் நாட்டில் வாழும் இந்துக்களின் நிலை!

செயின்ட்டெனிஸ், மே 3

லாரீயூனியன் நாட்டுக்கு விஜயம் செய்த பரிசுத்த பாப்பரசருக்கு அங்கு வாழும் லட்சக்கணக்கான தென்னிந்தியத் தமிழரும் பக்திமயமான வரவேற்பளித்தனர். ஆபிரிக்காவில் உள்ளஇந்த நாட்டில் வாழும் 5 லட்சத்து 70 ஆயிரம் பேரில் 5 லட்சம் பேர் கத்தோலிக்கர்களாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்.

ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தென்இந்தியத் தமிழர் கத்தோலிக்கத்தைத் தழுவியுள்ளனர். என்றாலும் இந்து பழக்க வழக்கங்களையே பின்பற்றி வருவதாக திருச்சபையினர் தெரிவித்தனர்.

இத்தமிழர் விஷ்ணுவையும் வழிபடுகின்றனர்; யேசுபிரானையும் வணங்குகின்றனர்.

இவர்கள் தங்கள் திருமணங்களை கிறிஸ்தவ தேவாலயங்களில் நடத்துகின்றனர். பின்னர் இந்து ஆலயங்களுக்குச் சென்று வணங்குகின்றனர்.

ஞாயிறு காலை தேவாலய வழிபாட்டில் கலந்து கொள்ளும் இவர்கள் மாலையில் இந்து ஆலயங்களில் நடைபெறும் தீமிதிப்பு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கின்றனர். (எ)

மூன்றும் உலக நாடுகள் பற்றி பரிசுத்த பாப்பரசர் கவலை!

அன்ரனரிவோ, மே 3

செல்வந்த நாடுகள் மூன்றாவது உலக நாடுகளுக்கு உதவுதல் வேண்டும். அதுவும் அவர்களின் தார்மீகக்கடமை.

பரிசுத்த பாப்பரசர் முன்கண்டவாறு சொன்னார்.

மடகாஸ்காரில் பாப்பரசருக்கு பக்திமயமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போதே பாப்பரசர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

உலகில் வாழும் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் பட்டினியால் வாடுகின்றார் என்பதை செல்வந்த நாடுகள் மனதிற் கொள்ள வேண்டும். (எ)

மே 31 வரை

சூடானில் யுத்தநிறுத்தம்! கெரில்லாக்கள் தீடீர் அறிவிப்பு

நைரோபி, மே, 3

சூடானில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் விடுதலை இராணுவம் யுத்த நிறுத்தம் ஒன்றை நேற்று திடீரென்று அறிவித்தது.

இம்மாதக் கடைசிவரை யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் என்றும் அதற்கு இடையில் சமரசத்தீர்வு காணப்பேச்சுக்களை நடத்த முன்வரும்படி பிரதமர் சாதிக்-அல் மஹ்திக்கு விடுதலை இராணுவம் சவால் விடுத்துள்ளது.

1983ஆம் ஆண்டில் இருந்து மக்கள் விடுதலை இராணுவம் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. (எ)

உஷார் நிலையில்

இஸ்லாமபாத், மே 3

பாகிஸ்தான் விமானநிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவுக்குச் சொந்தமான விமானம் ஒன்றை கடத்தப்போவதாக இனந்தெரியாத குழு ஒன்று எச்சரித்ததைத் தொடர்ந்து இந்த உஷார் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (எ)

காங்கேசன்துறையில் நவீனசந்தை அமைக்குமாறு கோரிக்கை

காங்கேசன்துறை மே 4

காங்கேசன்துறைப் பகுதி மக்களின் நலன் கருதி நவீன சந்தை ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காங்கோன்துறையில் தற்போது சந்தை அமைந்திருக்கும் கட்டிடம் மிகப்பழமை வாய்ந்ததுடன் சந்தைக்குரிய வசதிகளும் இல்லாதிருப்பதால் வியாபாரிகளும், பொதுமக்களும் பெரிதும் கஷ்டமுறுகிறார்கள்.

மழை பெய்ததும் இச்சந்தைப்பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதுடன் கட்டாக்காலிகளும் சந்தைப் பகுதியை அசுத்தப்படுத்துகின்றன.

ஏற்கனவே காங்கேசன்துறையில் நவீன சந்தை ஒன்றை அமைக்க நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் சிபார்சில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பின்பு ஏற்பட்ட ஸ்திரமற்ற சூழ்நிலைகளால் இத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

ஆகவே தற்போதுமாவட்ட ரீதியில் புனருத்தாரண திட்டங்களை செயற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் காங்கேசன்துறையில் நவீன சந்தை ஒன்றை அமைக்கும் திட்டத்தையும் இதனுடன்சேர்த்துக்கொள்ளுமாறு இப்பகுதி பொதுமக்கள் சமபந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் (இ-68]

சிவல் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு உரிமைக் குரல் எழுப்ப வேண்டும்

தொழிற்சங்கப் பிரதிநிதி பேச்சு

யாழ்ப்பாணம், மே. 04

சிவல் தொழிலாளர்கள் எல்லோரும் ஐக்கியப்பட்டு ஒரே சங்கத்தில் ஒன்றுபட்டால் தான் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊழல், மோசடிகள் இல்லாது தொழிலாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் நன்மையளிக்கும் கூட்டுறவுச் சங்கமாக செயற்பட முடியும். தொழிலாளர் ஒன்றுபட்டு குரல் எழுப்பாவிட்டால் சிவல் தொழிலாளர் கொடுக்கும் கள்ளுக்கு நியாய விலை கிடைப்பதோ, அவர்களுக்கு ஏற்படும் விபத்துகளுக்கு உரிய நிவாரணம் கிடைப்பதோ, அவர்களின் சேமலாப நிதி ஒழுங்காகக் கட்டப்படுவதோ நடைபெறாது'' மாலிப்பாய் பரீஸ் தெ. ப. பொ. உ. வி. கூ சங்க அங்கத்தவர்களின் கூட்டம் சங்கத் தலைவர் திரு. சி. அன்னலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வடமாகாண தொழிற்சங்கப் பிரதிநிதி திரு. அ. இராசலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண அரசின் யாழ் மாவட்ட அபிவிருத்தி இணைப்பாளர் திரு. சிவலிங்கலிங்கம் கலந்து கொண்டு வருகிறார். (க)

புனித லூலதுல் கத்ர் விசேஷ நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மே. 04

யாழ்ப்பாணம் கோட்டை ஜும்ஆப்பள்ளி வாசலில் புனித ரமழானில் வரும் லூலதுல் கத்ரை முன்னிட்டு 7.40 இஷாத் தொழுகையோடு ஆரம்பிக்கும் விசேஷ நிகழ்ச்சிகளில் தராவீஹ், தஸ்பீஹ், வித்ரு, யாளீன் ஓதுதல், திக்ர், ஸலவாத், தௌபா, துஆப் பிரார்த்தனை போன்ற நிகழ்ச்சிகள் மௌலவி. எஸ். எம். பௌசுல் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்ச்சிகளுக்கான சகல ஏற்பாடுகளையும், பள்ளிவாசல் நிர்வாகிகளும், முன்னேற்றச் சங்கத்தினரும் செய்துள்ளனர் என்றனர்.

இலவச தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 4

தையல் பயிற்சி, மற்றும் தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி வகுப்புக்கள் வசதி குறைந்தகுடும்பத்தினருக்கு இலவசமாக நடைபெறவுள்ளன.

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவுக்கு இங்கிலாந்தில் உள்ள ஸ்கொட்லன்லும் தமிழர்' அமைப்பு நன்கொடையாக வழங்கியுள்ள 10தையல் இயந்திரங்களும் 10தட்டச்சு இயந்திரங்களும் கிடைத்ததும் இந்தப் பயிற்சிகள் ஆரம்பமாகும்.

இதற்கான ஏற்பாடுகளை மக்கள் நலன்காக்கும் பிரிவின் பொருளாளரும்தொழில்கல்வி திட்டப்பிரிவு நிறைவேற்று அதிகாரியுமான திரு. த. தெய்வேந்திரராஜா செய்துவருகிறார்.

பல்கலைக்கழகங்களை மீண்டும் 10 ஆம் திகதி திறப்பதில் சிக்கல் நிலை?

கொழும்பு, மே 4

கென் பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்களை வருகிற 10 ஆம் திகதி மீண்டும் திறப்பதில சிக்கல் ஏற்படக்கூடிய நிலை கென்படுவதாக தெரிய வருகிறது.

பல்கலைக்கழகங்களை மீண்டும் திறப்பதற்கு மாணவர்கள் காணுமற் போனதாகக் கூறப்படும் பிரச்சினை ஒரு தடைக்கல்லாக அமையும் என்று பல்கலைக்கழக ஆசிரிய சம்மேளனப் பிரதிநிதிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனப் பிரதிநிதிகளுடன் உயர்கல்வி அமைச்சர் ஜனப் ஏ. சி. எஸ். ஹமீத் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பேச்சுக்களை நடத்த இருக்கிறார்.

காணுமற் போனதாகக் கூறப்படும் பல்கலைக் கழக மாணவர் பற்றி ஆராய்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்ற சம்மேளனத்தின் கோரிக்கை இச்சந்திப்பின் போது ஆராயப்படும் என்று தெரிகிறது.

இதனிடையில் அகில இலங்கைத் துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் உயர் கல்வி அமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

வடகொழும்பு தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர் சம்பந்தமாக கொடுக்கப்பட்ட வாக்குறுதி மீறப்பட்டிருப்பதாக அக்கடிதத்தில் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. (ஒ-எ)

நோன்பாளிகள் நல்ல தூய்மையான எண்ணத்தோடும், நம்பிக்கையோடும் இருக்க வேண்டும். இல்லையேல் அவர்கள் தமது நோன்பின் மூலம் ஆத்மாவைக் கஷ்டப்படுத்தியது மட்டுமே மிகுதியாகும். (அவர்கள்) நோன்பாளிகள் தமது நோன்பின் மூலம் வெறும் பசியையும், தாகத்தையும் பெற்றுக் கொண்டதைத் தவிரவேறு எப்பிரயோசனமும் நன்மைகளும் அவர்களுக்கில்லை. ஆகவே நோன்பின் சட்டதிட்டங்களை நன்முக உணர்ந்து சீராகக் கடைப்பிடித்த நோன்புகளே எமக்குப் பிரயோசனம் தரும்.

ஸஹர் முடிவு: 4-21
நோன்பு திறக்கும் நேரம்: 6-20

அப்பர் குருபூசை

யாழ்ப்பாணம், மே 4

கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியசாலையில் அப்பர் சுவாமி குருபூசை விழா இந்துமாணவர்மன்றத் போஷகர் ஆசிரிய திருமதி. செ. பூபதி தலைமையில்நடை பெற்றது.

திரு. இ. ஸ்ரீதரன்சங்கீத கலாச் சேபமும் செல்விகள் பா. வத்சலா, இ. உமாராணி ஆகியோரின் இன்னிசை விருந்தும் செல்வி. அர்ப்பாணுவின் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
* குழந்தைகளுக்கான ஆடைகள்,
சுகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கு 5
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :: யாழ்ப்பாணம்.

உதயன்

04 - 05 - 1989 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
* பட்டுப் பிடைவைகள்
* பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

ஒப்பந்தத்துக்கு உட்பட்டதாகவே எந்தத் தீர்வும் இருக்க வேண்டும்

பிரேமதாஸவிடம் சிங் வற்புறுத்து

கொழும்பு, மே4

இலங்கை இனப்பிரச்சினைக்குக் காணப்படும் எந்த அரசியல் தீர்வும் இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு உட்பட்டதாக இருப்பதையே இந்தியா வரவேற்கும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் விசேட தூதுவராக வந்த அந்நாட்டு வெளியுறவுச் செயலாளர் திரு. எஸ் கே. சிங், ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாசவிடம் வலியுறுத்தினார்.

வடக்கு — கிழக்கு மாகாண அரசுக்குக் கூடுதல் அதிகாரங்களை முழுமனதோடும் விரைவாகவும் வழங்குவதன்மூலமே இலங்கை நாட்டின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் கட்டிக்காக்கும் சக்திகளை வளர்த்துக்கொள்ள முடியும் என்ற இந்திய அரசின் நிலைப்பாட்டையும் திரு சிங், ஜனதிபதி பிரேமதாசாவிடம் எடுத்துச் சொன்னார்.

சாத்தியமான அளவு குறைந்த காலவரையறையினுள் மாகாணசபை அமைப்பு முறையைத் தொடர்ந்துஇயங்கக்கூடியதாக, நம்பக்கூடியதுமான ஓர் அமைப்பாக மாற்றுவதில் ஈடுபட்டிருக்கும் தனது எண்ணத்தை இலங்கை அரசு, பேச்சுக்களின்போது திரு. சிங்கிடம் தெரிவித்தது.

சாதகமாகப் பரிசீலனை

மாகாண அரசுக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்குவது பற்றிய ஆலோசனைகளைச் சாதகமாகப் பரிசீலனை செய்யவும் இலங்கை அரசு பேச்சுக்களின்போது ஒப்புக் கொண்டது.

மாகாணசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குவது, அதுசம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நிர்வாக மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம்பற்றியும் வெளியுறவுச் செயலாளர் திரு. சிங்கிடம் இலங்கையின் சார்பில் விவரிக்கப்பட்டது.

உத்தேச இந்திய - இலங்கை நட்புறவு ஒப்பந்தம்பற்றியும் பேச்சுக்களின்போது பரிசீலிக்கப்பட்டது.

நேற்றுக்காலை செய்தியாளர்களிடம் பேசிய திரு. சிங், இலங்கை ஜனதிபதி மற்றும் தலைவர்களுடன் நடத்திய விரிவான பேச்சுக்கள் குறித்துத் தாம் திருப்தியடைந்திருப்பதாகத் தெரிவித்தார். [அ-எ]

எனது பக்களுடன் பேசுவதை எவராலும் தடுக்க முடியாது

ஜனதிபதி பிரேமா கூறுகிறார்

கொழும்பு, மே 4

நாட்டின் வடக்கு கிழக்கு, மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் எனது மக்கள்தான் வாழ்கிறார்கள். அவர்களுடன் நான பேசமுடியும் அதை நிறுத்த எவராலும்முடியாது.

ஜனதிபதி பிரேமதாஸா மேதினக்கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்—

சமாதானத்தை நிலைநாட்டத் தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் நான் எடுப்பேன். மக்களின் இறைமையைப் பாதுகாக்கக்கூடியதாக அரசமைப்புக்கு உட்பட்டே சமாதானத் தீர்வு காணப்படும்.

பிரதேச ஒருமைப்பாடும் இறைமையும் இந்த நாட்டு ஜனநாயக அமைப்பின் தூண்களாகும். இதை அழிக்கும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது — என்று ஜனதிபதி சொன்னார். [அ-எ]

உண்மையான அமைதி ஏற்பட அனுரா கூறும் வழி

கொழும்பு, மே 4

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், மக்கள் விடுதலை முன்னணியும் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள முன் வரும்போது தான் நாட்டில் உண்மையான அமைதி தோன்ற முடியும்.

சுதந்திரக்கட்சி எம். பியான திரு. அனுரா பண்டார நாயக்கா பொரளை கம்பெல் மைதானத்தில் நடந்த மேதினக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில், இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நடத்தும் பேச்சுக்கள் மூலம் நிரந்தர அமைதிக்கு வழியேற்படுமானால் அதனை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம் — என்று சொன்னார். [ஒ-எ]

சபாநாயகர் கனடா பயணம்

கொழும்பு, மே 4

சபாநாயகர் அல் ஹாஜ் எம்.எச்.முகம்மது நேற்றுமுன தினம் கனடா பயணமானார்.

காமன்வெல்த் நாடாளுமன்றச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதே அவரது விஜயத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

கடலில் மூழ்கி மரணம்

குருநகர், மே 4

தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி மரணமானார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை மண்கும்பான் ஒலீத்துறைக் கடலில் நடைபெற்றது.

இறந்தவர் 35 வயதான குருநகர் றெக்கிளேஷன் வாசியான சுவக்கீன் அன்ரனி (தர்மா) என்பவராவார். (ஒ-51)

முதியவர் சூட்டுக்குப் பலி!

கழிபுரம், மே 4

கழிபுரம் கிழக்கு சக்தியக்காடடு வீதியில் நிங்கட்கிழமை இரவு ஏழு மணிபளவில் தமது இளைய மகள் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த முதியவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்.

பலியானவர் எஸ். இராசரத்தினம் (வயது 60) என்பவராவார். இவர் பூநகரியைவார். (ஒ-28)

பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், மே 4

கோண்டாவில் பொறுப்பதி வீதியிலுள்ள ஒருவீட்டிலிருந்து இந்திய அமைதிப் படையினர் சில பொருள்களை மீட்டெடுத்துள்ளனர் என கோண்டாவில் அமைதிப்படை முகாம் பொறுப்பதிகாரி திரு. சசி குமார் தெரிவித்தார்.

ஒரு வர்ண தொலைக்காட்சி, இரண்டு ரேப் றெக்கோர்டர்கள், ஒரு ட்ரான்சிஸ்டர் ரேடியோ, இரண்டு மேசை மின் விசிறிகள், ஒரு ஹொண்டா மோட்டார் சைக்கிள் ஒரு 125 ஆகியவையே மீட்கப்பட்டவையாகும்.

உரிமையாளர்கள் தக்க ஆதாரங்காட்டி இப்பொருள்களை கோண்டாவில் அமைதிப் படை முகாமுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

சாய்ப்புச்சட்டம்

குருநகர், மே 4

யாழ்நகரிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் நடைமுறையில் இருந்து வருகின்ற ஞாயிறு சாய்ப்புச் சட்டத்தை குருநகர் நவீனசந்தைப் பகுதிக்கும் விஸ்தரிக்க குருநகர் புதியசந்தை வர்த்தகர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. [க-51]

சயனைட் அருந்தி மரணம்

யாழ்ப்பாணம், மே 04

கடந்த 30 ஆம் திகதி நீர்வேலி இராஜ வீதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவர் மரணமானார். அமைதிப்படையினரின் சுற்றிவளைப்பை அடுத்து ஏற்பட்ட மோதலின்போது இவர் சயனைட் உட்கொண்டு மரணமானார் எனத் தெரிவிக்கப்பட்டது

இறந்தவர் ஜெயராஜா எனற ஜெகன் [வயது 22] என்பவராவார். [ஒ-9]

மோட்டார் சைக்கிள் கையளிப்பு

யாழ்ப்பாணம், மே 4

கடந்த 14 ஆம் திகதி யாழ். சுந்தர்மடத்தில் கார்க் குண்டு வெடிப்பு நடந்த இடத்தில் மீட்கப்பட்ட ஹொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்று தற்போது கோண்டாவில் அமைதிப்படை முகாமில் இருக்கிறது

இந்த மோட்டார் சைக்கிள் இன்று வியாழக்கிழமை அதன் உரிமையாளரான சுந்தர்மடத்தைச் சேர்ந்த திரு. என். முரளி கிருஷ்ணனிடம் கையளிக்கப்படும் என கோண்டாவில் இந்திய அமைதிப்படை முகாம் பொறுப்பதிகாரி திரு. சசிகுமார் தெரிவித்தார். (க)

பருத்தித்துறை --

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்படாத வரின் சடலம் எரியுண்ட நிலையில் சந்தியில் கிடக்கக் காணப்பட்டது.

அதேவேளை கதிரவேல் தங்கவேல் (வயது 35) சூட்டுக் காயங்களுடன் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

ஒராங்கட்டைச் சந்தியில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தியதனால் பல வீடுகள் சேதமுற்றுள்ளன. பிரதான வீதியிலுள்ள பரிமளம் என அழைக்கப்படும் திரு. எஸ். நடராசா என்பவரது வீட்டின் மீது ஷெல் விழுந்து வீடு சேதத்துக்குள்ளாகியுள்ளது. மேலும் விஸ்வகுல ஒழுங்கையிலும் சில வீடுகள் சேதமுற்றுள்ளதாக அறிய வருகிறது.

செல்வாய் பிற்பகல் 4-30 மணியளவிலேயே இப்பகுதி அமைதியடைந்தது. எனினும் பருத்தித்துறையில் பதற்றம் மேலும்தொடர்கிறது.பொது மக்கள் வெளியே வருவதற்கு அச்சமடைகின்றனர். பிரதான வீதியோரத்திலுள்ள வீடுகளிலுள்ளவர்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகிறார்களெனத்தெரிகிறது.

பின்வரும் கடைகள் எரிக்கப்பட்டுக் காணப்படுகின்றன:

பவான் ஹார்டவெயர்ஸ்ரோர்ஸ், ஜோசப் மோட்டார் வேக்ஸ், தீதா றீவைன் டிங் வேக்ஸ், பொபி கூல்பார், யாழ். சீப்சைட், சுசீலா புடைவைக் கடை, சிவநாதன் பேக்கரி, பாட்டா சூ பலஸ் மற்றும் இரண்டு பலசரக்குக் கடைகள்.

இச்சம்பவங்களினால் வடமராட்சியில் போக்குவரத்துச் சேவைகள், அரசாங்க அலுவலகங்கள் பாடசாலைகள் என்பன செயலிழந்தன. (அ-118-160)

3 ஆயிரத்து....,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் ஜனதிபதியைச் சந்தித்து வேலையிழந்த அரசு ஊழியரின் பிரச்சினைபற்றி எடுத்துரைத்தார்.

அதைத் தொடர்ந்தே ஜனதிபதி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார். (ஒ-9)

கைதடி...

மீசாலை, ஏ. ராஜா [வயது 25] சாவகச்சேரி, ஏ. மதியாசன் [வயது 33 – பஸ்ஸின் நடத்துனர்] கரணவாய்.

இந்தச் சம்பவம் பற்றி யாழ். பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-9

ஈ.பி.ஆர்.எல்.எவ். அழைப்பு

யாழ்ப்பாணம், மே 4

பதினேழு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு இந்தியப் பிரசையும் தமது பிறப்புச் சான்றிதழ் அல்லது பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்த சான்றிதழ் இவற்றில் ஏதாவது ஒன்றுடன் கிளிநொச்சியிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அலுவலகத்துக்கு இன்று [4 ஆம் திகதி] முதல் 6 ஆம் திகதி வரை சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது பற்றிய மேலதிக தகவல்களை கிளிநொச்சி அலுவலகத்தில் அறிந்துகொள்ள முடியும்.

அதேசமயம் கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்களும் கிளிநொச்சி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டொத்துழைப்பு வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதனை ஈ.பி.ஆர்.எல்.எவ் வின் யாழ். அலுவலகம் நேற்று அறிவித்தது. [ஒ]

யாழ் செயலகம்

யாழ்ப்பாணம், மே 4

யாழ் செயலகம் நேற்றும் கடந்த செவ்வாய்க்கிழமையும் ஸ்தம்பித நிலையில் இருந்தது. ஊழியர் வரவு வெகு மந்தமாக இருந்தது.

செயலகம் அடுத்த செவ்வாய்க் கிழமையே இயங்க ஆரம்பிக்கலாம் என்றும், அதற்கு முன்னின்று பணியாற்ற எந்த உயர் அதிகாரி கேட்கப்படுவார் என்பது குறித்து இன்னும் தகவல் இல்லை என்றும் அறியவருகிறது. [அ-9]

மீன்பிடித் தடை தளர்வு

தாளையடி, மே 4

வடமராட்சி கிழக்குப்பிரதேசத்திலுள்ள கரையோரப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக அமுல்படுத்தப்பட்டிருந்த மீன்பிடித்தலுக்கான தடை தளர்த்தப்பட்டுள்ளது.

எனினும் குறிப்பிட்ட சில இடங்களில் மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணி வரை இரவுநேரத்தில் மீன் பிடித்தலுக்குத் தடை தொடருகின்றது. [ஒ-144]

கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை

கொழும்பு, மே 4

மாவரல பொலீஸைச் சேர்ந்த கான்ஸ்டபிள் என். ரத்னாயக்க மாத்தறை, திப்பிற்றியில் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பரப்பமுல்ல என்னுமிடத்தில் 29 வயது இளைஞர் ஹெலபுஞ்ச என்பவரும் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார். (ஒ-எ)

பெண் உட்பட நான்கு பேர் சுட்டுக்கொலை

கொழும்பு மே 4

பொலன்னறுவையில் ஒரு பெண் உட்பட நான்கு பேர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொலைப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் தீவிரவாத இயக்கம் ஒன்றின் ஆதரவாளர்கள் என்று சொல்லப்பட்டது.

இவர்களின் மரணத்துக்கு இன்னுமொரு தீவிரவாதக் குழு உரிமை கோரியுள்ளதாம். [ஒ-எ]

இறுதிக் கிரியைகள் திக்கமுனையில்

வல்வெட்டித்துறை, மே 4

பருத்தித்துறையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற மோதலின்போது மரணமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மூவரதும் இறுதிக் கிரியைகள் திக்கமுனை மைதானத்தில் இடம் பெற்றன. (ஒ-160)

விடுதலைப் புலிகளின்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் பாதுகாப்பாகக் கொழும்பிற்கு வந்து சேர்ந்துவிட்டதாகவும் பி. பி. எஸ். நேற்று இரவு அறிவித்தது.

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை இந்திய அரசு வரவேற்றிருப்பதால்—

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகள் வன்னிக் காட்டுப் பகுதியிலிருந்து பாதுகாப்பாக கொழும்புக்கு வருவதற்கு இந்தியப் படைகள் ஒத்துழைப்பு வழங்கும் என இலங்கை அரசு எதிர்பார்த்திருந்தது என்றும் பி. பி. எஸ். செய்தி தெரிவித்தது.

இதேவேளை இலங்கை அரசு

கனேடிய நிலைய அதிகாரிகள் யாழ்நகரில்

யாழ்ப்பாணம், மே 4

நேற்று யாழ் நகருக்கு கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

திரு. பிலிப், எ. மாரா, திருமதி ஜே. கணேஷ் ஆகியோரே இங்கு விஜயம் மேற்கொண்ட அதிகாரிகளாவர்.

இவர்கள் செஞ்சிலுவைச் சங்க வடபகுதிப் பிரிவுக் கிளை அலுவலகத்துக்கும் சென்றிருந்தனர். [ஒ-9]

கனான பேச்சுவார்த்தைகளுக்கு வசதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பத்துநாள் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்திருப்பதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்ததாக பி. பி. எஸ். மேலும் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வப் பேச்சாளர்கள் கொழும்பு வந்து சேர்ந்திருப்பதால் இலங்கை அரசுகனான உத்தியோகபூர்வ பேச்சுகள் இன்று ஆரம்பமாகும் என விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. அன்ரன் பாலசிங்கம் கூறியதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது. [உ]

செல்வாய் மட்டும் எண்மர் பலி!

கொழும்பு, மே 4

தென் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல்களில் ஒரு சிப்பாய் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர்.

கஹட்டக்ஸ்லிய என்னுமிடத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடத்தப்பட்ட நிலக்கண்ணி தாக்குதலில் 2 பொலீஸ்காரர் கொல்லப்பட்டனர். 6 பொலீஸார் படுகாயமடைந்தனர்,

(ஒ-எ)

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஸ்ரீலங்கா கடற்படையின் காரைநகர் தளத்தில் நிழ்ந்த தாக்குதலின் போது மரணித்த தோழர்களான

* சின்னவன்
* வேலு
* கணேஷ்
* ரஞ்சன்
* அரவிந்தன்
* சோபா

ஆகியோருக்கு
எமது நினைவு அஞ்சலிகள்!
— நண்பர்கள்.

[சி/2451]

மரண அறிவித்தல்கள்

திரு காசிப்பிள்ளை சேனதிராஜா

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த திரு. காசிப்பிள்ளை சேனதிராஜா 03-05-1989 இல் காலமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், கோமதி, தவராசா, தருமசேகரம் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. இ. பஞ்சலிங்கம், திருமதி த. வரலக்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாளினி, தயாளன் [ஜேர்மனி], தர்சினி, தயானந்தன், கனுசா, நிருசன், நிருசி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 04-05-1989 இன்று மாலை 2-00 மணிபளவில் அவரின் இல்லத்தில் இருந்து நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. [10824]

திரு. ஆறுமுகம் கந்தையா

நீலிப்பந்தனை, காரைநகர்

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்தவரான திரு. ஆறுமுகம் கந்தையா அவர்கள் (முன்னாள் வர்த்தகர், கந்தனை) 3-5-89 புதன் கிழமை காலை காரைநகரில் சிவபதமடைந்து விட்டார். அன்னார் சிவமணியின் அன்புக் கணவரும் தியாகலிங்கம் (லண்டன்) தருமராசா (அமெரிக்கா), கனகராசா (கனடா), மனோ ரஞ்சனி (யாழ். போதனா வைத்தியசாலை). பஞ்சலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தநாயகி (லண்டன்), காஞ்சனா (கனடா), கனகசபாபதி (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சங்கானை) ஆகியோரின் அன்பு மாமனாரும், துஷந்தி, வர்சினி, சத்தியசொரூபி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கனகசபாபதி.

(10823)

வேலை வாய்ப்பு

கீழ்வரும் வேலைகளுக்கு வேலை ஆட்கள் தேவை.

1, தொழிற்சாலை மனேஜர் - 1
2. வேலை பேற்பார்வையாளர் - 5
3. எழுதுவினைஞரும் காசாளரும் - 1
4. பாதுகாவலர் - 15

இளைநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகள் சனி, ஞாயிறு (6|5, 7|5) நாட்களில் நேர்முகப் பரீட்சைக்கு காலை 8-00 மணிக்கு வரவும்.

Note.- பிறமாவட்ட விண்ணப்பதாரிகள் 8-5 89இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு:
லங்கா செங்கல் தொழிற்சாலை
(சேச் அருகாமை)
154ஆம் கட்டை, கண்டி வீதி,
முருகண்டி.
(415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 282/2 இல் உள்ள அச்சகத்தில் 04 — 05 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.